**செப்டம்பர் – 20**

# TNPSC துளிகள்


- ஓட்டுநர் உரிம விண்ணப்பதாரர்களுக்கு சர்வதேச தரத்தின் அடிப்படையிலான 1 நிமிட அளவிலான 10 காணொளிகளைப் பயன்படுத்தி, சாலை அபாயங்களைக் கண்டறிந்து சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கும் வகையில் அவர்களின் திறன் இதில் சோதிக்கப்படும் விதமாக கட்டாய அபாய உணர்திறன் சோதனையை (HPT) இந்தியாவிலேயே முதன்முறையாக கேரளா அறிமுகப்படுத்த உள்ளது.
- பால்மீனின் சந்தை வாய்ப்பையும் நுகர்வோர் ஏற்பையும் மேம்படுத்தும் நோக்கில், ICAR-CIBA (இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் – மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு நிறுவனம்) முள் நீக்கும் தொழில்நுட்பம் ஒன்றை அறிமுகப்படுத்தியது.
- டாடா சன்ஸ் குழுமத்தின் செயல் தலைவராக என். சந்திரசேகரன் மேலும் ஐந்தாண்டு காலத்திற்கு (2027 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் 2032 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை) மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- சென்னையில் பிறந்த அறிவியலாளரான சேதுராமன் பஞ்சநாதன் 2026 ஆம் ஆண்டிற்கான IEEE ராபர்ட் போஷ் பியூச் விருதுக்கு (IEEE Robert Bosch Bueche Award) தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் இந்திய-அமெரிக்கர் ஆவார்.
    - பியூச் விருதானது தொழில்நுட்பம் மற்றும் பொதுக் கொள்கைக்கான சிறந்தப் பங்களிப்புகளை அங்கீகரிக்கிறது.
- நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணரான மைக்கேல் கிரேமர், 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று உலக வங்கிக் குழுமத்தின் தலைமைப் பொருளாதார நிபுணராகவும், மேம்பாட்டுப் பொருளாதாரத்திற்கான மூத்த துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.
    - வறுமையை ஆய்வு செய்ய பரிசோதனைகளைப் பயன்படுத்தியதற்காக 2019 ஆம் ஆண்டில் அபிஜித் பானர்ஜி மற்றும் எஸ்தர் டுஃப்லோ ஆகியோருடன் இணைந்து கிரேமர் பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசைப் பகிர்ந்துகொண்டார்.
- இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள 6,318 மீட்டர் உயரமுள்ள ராம்ஜாக் (Ramjak) சிகரத்தை அடைந்த கேரளாவைச் சேர்ந்த முதல் குழு என்ற பெருமையை மூணாறைச் சேர்ந்த நான்கு மலையேறுபவர்கள் பெற்றுள்ளனர்.
    - ராம்ஜாக் சிகரம் இமாச்சலப் பிரதேசத்தின் தொலைதூர லாஹவுல் (Lahaul) பகுதியில் அமைந்துள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் - தேசிய அறிவியல் தொடர்பு மற்றும் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (CSIR-NIScPR) ஆனது, செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தி அறிவியல் அறிவை பரவலாக்குவதற்காக ஆராய்ச்சி கட்டுரைகளை குறுகிய காணொளிகளாக மாற்றுவதற்கு என்று அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையின் (ANRF) முன்னெடுப்பான SARAL AI என்பதைப் பயன்படுத்துகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் திருத்த மசோதா, 2026

- 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்த) மசோதாவின் சில விதிகள் குறித்து மாநில அரசிடம் தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் விளக்கங்களைக் கோரியுள்ளார்; இந்த மசோதா தொடர்ந்து அவரது பரிசீலனையில் உள்ளது.

- 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி, ஒரு தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவ குறைந்தபட்சம் 100 ஏக்கர் தொடர்ச்சியான நிலமும் ₹50 கோடி நிரந்தர அறக்கட்டளை நிதியும் தேவைப்பட்டது.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் நிலத் தேவையை 12 ஏக்கராகவும், இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 18 ஏக்கராகவும், மற்ற பகுதிகளில் 25 ஏக்கராகவும் குறைக்க இந்தத் திருத்தம் முன்மொழிகிறதுடன் மேலும், அறக்கட்டளை நிதியை ₹25 கோடியாகக் குறைக்கவும் முன்மொழிகிறது.
- 2026 ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரில் 13 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன; ஆளுநர் மற்ற 12 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார், ஆனால் தனியார் பல்கலைக் கழகங்கள் மசோதாவுக்கு இதுவரை ஒப்புதல் அளிக்கப்படவில்லை.




# தேசியச் செய்திகள்


## புதிய பருவநிலை ஆளுமைத் தளங்கள்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று உலக ஓசோன் தினத்தில் மும்பையில் இந்திய நெட் ஜீரோ இணையதளம் (India Net Zero Portal) மற்றும் தேசிய பருவநிலை மாற்ற செயல்திட்ட (NAPCC) தகவல்பலகை ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது.
- இந்திய நெட் ஜீரோ இணையதளம் ஆனது இந்திய நிறுவனங்கள் தங்களது நிகர பூஜ்ஜிய (Net Zero) கடமைகளைத் தன்னார்வத்துடன் பதிவு செய்யவும், அதன் முன்னேற்றத்தை அறிக்கை செய்யவும் அனுமதிக்கிறது; ஸ்கோப் 1 மற்றும் ஸ்கோப் 2 உமிழ்வுகள் ஊக்குவிக்கப்படுகின்றன, அதே நேரத்தில் ஸ்கோப் 3 அறிக்கையிடல் தன்னார்வமானதாகும்.
- 2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட NAPCC-இன் கீழான இந்தியாவின் 8 தேசியப் பணிகளின் செயலாக்கம் மற்றும் முன்னேற்றத்தைக் கண்காணிக்க NAPCC தகவல் பலகை ஓர் ஒருங்கிணைந்த தளத்தை வழங்குகிறது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் நிகர பூஜ்ஜிய (Net Zero) உமிழ்வை அடைய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இந்த 8 பணிகளில் தேசிய சூரிய சக்தி திட்டம், தேசிய நீர் திட்டம், பசுமை இந்தியாவுக்கான தேசிய திட்டம், நிலையான வேளாண்மைக்கான தேசிய திட்டம் மற்றும் பிற நான்கு பருவநிலைத் திட்டங்கள் அடங்கும்.

- மாண்ட்ரீல் நெறிமுறை (1987) ஏற்றுக்கொள்ளப்பட்டதைக் குறிக்கும் வகையில் உலக ஓசோன் தினம் ஆண்டுதோறும் செப்டம்பர் 16 அன்று அனுசரிக்கப்படுகிறது.




## தேசிய நீர் உச்சி மாநாடு 2026




- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 2 அன்று புது தில்லியில் நடைபெற்ற நீர் தொடர்பான தேசிய துறைசார் உச்சிமாநாட்டில் செயற்கை நுண்ணறிவை (AI) அடிப்படையாகக் கொண்ட நீர் தரவு ஆளுமை தேவை என பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.
- இந்த உச்சி மாநாடு ஜல் சக்தி அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த உச்சி மாநாட்டில் நீர் தரவுகளின் ஒருங்கிணைந்த சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் பயன்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது.
- சிறந்த நீர் தரவு மேலாண்மைக்காக செயற்கை நுண்ணறிவு மற்றும் சீரான தரவு வடிவங்கள் பரிந்துரைக்கப்பட்டன.
- உச்சி மாநாட்டு பரிந்துரைகளை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் செயல்படுத்துவதற்கு வழக்கமான ஆய்வுகள் பரிந்துரைக்கப்பட்டன.

- நகர்ப்புறமயமாக்கலால் அதிகரித்து வரும் நீர்த் தேவையைச் சமாளிக்கத் தயாராகுமாறு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBs) அறிவுறுத்தப்பட்டன.

## சுரக்சித் சாகர் பிரச்சாரம்

- கடல் குப்பைகளை அகற்றுதல் மற்றும் கடலோரப் பாதுகாப்பிற்காக 5-வது பதிப்பான 'ஸ்வச் சாகர், சுரக்சித் சாகர்' (SSSS) 2026 பிரச்சாரமானது 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 அன்று தொடங்கப்பட்டது.
- ஒரு வாரம் நடைபெறும் இப்பிரச்சாரம் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 முதல் 19 வரை நடைபெற்று, சர்வதேச கடலோர தூய்மை தினத்துடன் முடிவடைகிறது.
- இப்பிரச்சாரம் இந்தியாவின் 11,098 கி.மீ கடற்கரையோரத்தில் 100க்கும் மேற்பட்ட கடற்கரைகளில் தூய்மைப்படுத்தும் பணிகளை உள்ளடக்கியுள்ளது.
- கடலோர அரிப்பு மற்றும் கடல்நீரின் தரத்தைக் கண்காணிப்பதற்கான புவி அறிவியல் அமைச்சகத்தின் பிரித்வி (PRITHVI) திட்டத்தின் கீழ் இது செயல்படுத்தப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான பதிப்பில் இளைஞர்களுக்கான முதல் தேசிய பெருங்கடல் ஒலிம்பியாட் (Ocean Olympiad) அறிமுகப்படுத்தப்பட்டது.
- இம்முயற்சியானது 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.





## விவசாயிகளுக்கான மண் கார்பன் கொடுப்பனவுகள்

- பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் உள்ள 2,500 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மண் கார்பன் வரவுகளுக்கான (soil carbon credits) தனது முதல் நேரடிப் பலன் பரிமாற்றக் கொடுப்பனவுகளை இந்தியா வழங்கத் தொடங்கியுள்ளது.
- இந்தக் கொடுப்பனவுகள் ₹2.9 கோடிக்கும் அதிகமாக இருந்தன, மேலும் இவை மீளுருவாக்க விவசாயத்திலிருந்து பெறப்பட்ட சரிபார்க்கப்பட்ட கார்பன் வரவுகளுடன் இணைக்கப்பட்டிருந்தன.
- விவசாயிகள் 2019–2022 ஆம் ஆண்டுகளில் நேரடியாக விதைக்கப்பட்ட நெல், குறைக்கப் பட்ட உழவு மற்றும் பயிர் கழிவு மேலாண்மை முறைகளைப் பயன்படுத்தினர்.
- ஆதி உழவர் கார்பன் திட்டம் 2019 ஆம் ஆண்டில் குரோ இண்டிகோ (Grow Indigo) நிறுவனத்தால் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம் ஏழு மாநிலங்களில் 2 மில்லியன் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பையும்

1 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளையும் உள்ளடக்கியுள்ளது.

- விவசாயிகளுக்கு தோராயமாக ₹3,000 முதல் ₹15,000 வரை கிடைத்துள்ளதுடன் இத்திட்டத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட 45 பில்லியன் லிட்டர் தண்ணீர் சேமிக்கப் பட்டதுடன், 2 லட்சம் டன்களுக்கும் அதிகமான பயிர்க் கழிவுகள் எரிக்கப்படுவதும் தவிர்க்கப் பட்டது.




# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய சுழற்சிப் பொருளாதார மன்றம் 2026




- 10-வது உலகளாவிய சுழற்சிப் பொருளாதார மன்றம் (WCEF) 2026 ஆனது குஜராத்தின் காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திர் மாநாட்டு மையத்தில் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 முதல் 18 ஆம் தேதி வரை நடைபெற்றது. இது தெற்காசியாவில் நடைபெற்ற முதல் WCEF ஆகும்.
- இதன் மையக்கருத்துரு Circular Economy: Transition for People and Prosperity என்பதாகும்.
- இந்த மன்றமானது 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது, மேலும் இது மறுபயன்பாடு, பழுதுபார்த்தல், மறு உற்பத்தி, மறுசுழற்சி மற்றும் வளத் திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- 2026 ஆம் ஆண்டுக்கான மன்றத்தை மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB), சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC), Sitra மற்றும்

குஜராத் அரசு ஆகியவை குஜராத் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் (GPCB) ஆதரவுடன் ஏற்பாடு செய்திருந்தன.

❖ சுழற்சி நிதி, நிலையான வளங்கள், செயற்கை நுண்ணறிவு (AI), டிஜிட்டல்மயமாக்கல், சுழற்சி விநியோகச் சங்கிலிகள், நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR), பசுமை வேலைவாய்ப்புகள் மற்றும் நிலையான தயாரிப்புகள் ஆகியவை இதன் முக்கியப் பகுதிகளாக அமைந்தன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## காலியம் நைட்ரைடு MMIC தொழில்நுட்பம்


❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஆனது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட காலியம் நைட்ரைடு ஒற்றை நுண்ணலை ஒருங்கிணைந்த மின்சுற்று (GaN MMIC) தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டியுள்ளது.

❖ GaN MMIC என்பது உயர் அதிர்வெண் நுண்ணலை சமிக்ஞைகளைக் கையாளுவதற்கான ஒரு சிறிய சிப் (Chip) ஆகும் என்பதோடு இது எக்ஸ்-பேண்ட் (X-band) வரை செயல்படும்.

❖ காலியம் நைட்ரைடு (GaN) அதிக ஆற்றல், சிறந்த ஆற்றல் திறன், வேகமான சமிக்ஞை செயலாக்கம் மற்றும் மேம்படுத்தப்பட்ட வெப்பச் செயல்பாட்டைக் கொண்டுள்ளது.

❖ 3.5 × 3 மிமீ அளவிலான ஒரு GaN சிப்/சில்லு 30 வாட்ஸ் வரையிலான ஆற்றலை வழங்கும், இது ரேடார்கள், செயற்கைக்கோள்கள், உணர்விகள் மற்றும் எறிகணைகளில் பயனுள்ளதாக இருக்கும்.

❖ DRDO இந்தத் தொழில்நுட்பத்தை 2024 ஆம் ஆண்டில் உருவாக்கியது, இதன் மூலம் உள்நாட்டு GaN MMIC தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள குறிப்பிட்ட சில நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதிய பூனை இனம் ‘தில்காயோ’

❖ ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பொலிவியாவில் முதன்முறையாக ‘தில்காயோ’ என்ற புதிய பூனை இனம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

❖ மரபணுப் பகுப்பாய்வின்படி, தில்காயோ இனமானது மற்ற புலிப் பூனைகளிலிருந்து

சுமார் 1.4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்தது என்று தெரியவந்துள்ளது.

- இது தென் அமெரிக்காவின் பெரும்பகுதியில் காணப்படும் புலிப் பூனைகள் எனப்படும் ஒரு குழுவின் பகுதியாகும்.
- இது பொலிவியாவின் பசுமையான யுங்காஸ் காட்டில், ஒரு மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது சுமார் 18 அங்குலம் (46 செ.மீ) நீளமும், சுமார் 3 பவுண்டுகள் (1.4 கிலோ) எடையும் கொண்டது, இது சராசரி வீட்டுப் பூனையை விடச் சிறியதாக உள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் மரபணுத் தரவைப் பயன்படுத்தி, இந்தப் பூனை ஒரு புதிய இனம் என்பதை உறுதிசெய்து, அதன் உள்ளூர் பெயரைத் தக்கவைத்துக்கொண்டு, அதற்கு லியோபார்டஸ் தில்காயோ (Leopardus tilcayo) என்ற அறிவியல் பெயரைச் சூட்டினர்.
- அதன் கழிவு மாதிரிகளில் காணப்படும் சிறிய கொறித்துண்ணிகளின் எச்சங்கள், அவை அதன் உணவின் ஒரு பகுதியாக இருக்கலாம் என்று சுட்டிக்காட்டுகின்றன, அதே நேரத்தில் கேமரா பொறி ஆதாரங்கள் அது இரவில் அதிக சுறுசுறுப்பாக இருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.
- புலிப் பூனைகள் மறைமுக இனங்கள் என்று அழைக்கப்படுகின்றன, அதாவது அவற்றின் தோற்றத்தை மட்டும் வைத்து எளிதில் வேறுபடுத்தி அறிய முடியாது.
- புலிப் பூனைகள் முன்னர் ஒரே இனமாகவே கருதப்பட்டு வந்தன, ஆனால் பல தசாப்தங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மரபணு ஆய்வுகள், பல இனங்கள் இருப்பதைக் குறிப்பிட்டன.
- இந்த ஆய்வுக் குழு, பெருவின் யுங்காஸ் பகுதியில் ஒரு புதிய புலிப் பூனைத் துணை இனத்தையும் விவரித்துள்ளது. அது வசிக்கும் பகுதியை உள்ளடக்கிய பழைய இன்கா பேரரசின் பிராந்தியமான ஆன்டிசுயுவின் நினைவாக, அதற்கு லியோபார்டஸ் டைக்ரினஸ் ஆன்டிசுயோ (Leopardus tigrinus antisuyo) எனப் பெயரிட்டுள்ளது.
- இயற்கைப் பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியத்தின் (IUCN) உயிரினங்களின் நிலையை கண்காணிக்கும் செம்பட்டியல், தற்போது புலிப் பூனைகளை, எண்ணிக்கையில் குறைந்து வரும் இரண்டு "எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம்" எனக் கருதுகிறது.




## புலிகள் நிலப்பரப்புகள் குறித்த சர்வதேச பயிலரங்கம்

- புலிகள் நிலப்பரப்புகள் குறித்த சர்வதேச பயிலரங்கம் புது தில்லியில் தொடங்கப் பட்டது.
- சர்வதேசப் பெரும்பூனை கூட்டமைப்பு (IBCA), ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும்


தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) ஆகியவை இணைந்து இப்பயிலரங்கத்தை ஏற்பாடு செய்தன.

- ❖ இதன் மையக்கருத்துரு "புலிகள் நிலப்பரப்புகள்: வாழ்வாதாரம் மற்றும் வருமான உருவாக்கத்திற்கான தூண்களாகப் பாதுகாப்பு, உயிரிப் பொருளாதாரம் மற்றும் சூழலியல் சுற்றுலா" என்பதாகும்.
- ❖ நிலப்பரப்பு பாதுகாப்பு, திறன் மேம்பாடு மற்றும் இயற்கை சார்ந்த நிதியளிப்பு ஆகியவற்றுக்காக IBCA மற்றும் ADB இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ❖ புலிகள் நிலப்பரப்புகள் நீர் பாதுகாப்பு, பருவநிலை ஒழுங்குமுறை மற்றும் கார்பன் சேமிப்பு ஆகியவற்றிற்கு ஆதரவளிப்பதோடு, உள்ளூர் வாழ்வாதாரங்களையும் ஆதரிக்கின்றன.




## மாநிலச் செய்திகள்

### தேவதுர்கா தங்கம்-தாமிர ஆய்வு




- ❖ கர்நாடக மாநிலம் ராய்ச்சூர் மாவட்டம் தேவதுர்கா தாலுகாவில் உள்ள லிங்கடஹள்ளி

கிராமத்தில் தங்கம் மற்றும் தாமிர ஆய்வுத் திட்டத்தை தெலங்கானா மாநிலம் தொடங்கியுள்ளது.

- தேவதுர்கா கனிமத் தொகுதி 199.13 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளதுடன், மத்தியச் சுரங்க அமைச்சகத்தால் ஏலம் மூலம் ஒதுக்கப்பட்டது.
- சிங்கரேணி காலியரீஸ் கம்பெனி லிமிடெட் (SCCL) இந்தத் திட்டத்தின் மூலம் முதல் முறையாகத் தங்கம் மற்றும் தாமிர ஆய்வில் நுழைந்துள்ளது.
- கர்நாடக சுரங்க மற்றும் நிலவியல் துறை மற்றும் SCCL ஆகியவற்றுக்கு இடையே 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 அன்று ஒரு ஆய்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அனல்மின் நிலையங்களுக்கான நிலக்கரி விநியோகம் தொடர்பாக கர்நாடகா மின்சாரக் கழகத்துடன் (KPCL) ஒரு கூட்டு முயற்சியையும் SCCL முன்மொழிந்துள்ளது.

# இதரச் செய்திகள்

## உலகளாவியத் தரவரிசை - கிஃப்ட் சிட்டி




- 2026 ஆம் ஆண்டு செப்டம்பரில் வெளியிடப்பட்ட உலகளாவிய நிதி மையங்கள் குறியீடு (GFCI) 40ல் கிஃப்ட் சிட்டி (GIFT City) உலக அளவில் 37வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- கிஃப்ட் சிட்டி 9 இடங்கள் முன்னேறி 37 வது இடத்தையும், மும்பை 3 இடங்கள் முன்னேறி 49வது இடத்தையும் பிடித்துள்ளன.
- ஆசியா-பசிபிக் பிராந்தியத்தின் முதல் 15 மையங்களில் இடம்பெற்ற ஒரே இந்திய நிதி மையம் இதுவாகும்.
- ஃபின்டெக் (FinTech) துறையில் கிஃப்ட் சிட்டி 3 இடங்கள் முன்னேறி 26-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- GFCI 40 ஆனது 144 அளவு அளவீடுகள் மற்றும் 39,531 தொழில்முறை மதிப்பீடுகளைப் பயன்படுத்தி 139 நிதி மையங்களை மதிப்பீடு செய்தது.
- இந்தக் குறியீட்டை Z/Yen பார்ட்னர்ஸ் மற்றும் சீனா மேம்பாட்டு நிறுவனம் வெளியிடச்

செய்கின்றன; சர்வதேச நிதிச் சேவை மையங்கள் ஆணையம் (IFSCA) கிஃப்ட் சிட்டியில் நிதிச் சேவைகளை ஒழுங்குபடுத்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★